

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வடக்கு, தெற்கு, ஒட்டன்சத்திரம்நகரம் உள்ளிட்ட வாக்குச் சாவடி முகவர்கள், வாக்குச்சாவடிகுழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமை வகித்து பேசினார். கூட்டத்தில் ஒட்டன்சத்திரம் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பரணி மணி, மாவட்ட அவைத் தலைவர் மோகன், ஜோதீஸ்வரன், வெள்ளைச்சாமி, ராஜாமணி, தர்மராஜ், கண்ணன், பாலு, செல்வராஜ், திருமலைச்சாமி, அய்யம்மாள், மலர்விழிசெல்வி, முருகானந்தம், சிவக்குமார், சிவபாக்கியம் ராமசாமி, ராமகிருஷ்ணன், அசோக்வேலுச்சாமி, முருகானந்தம் உள்ளிட்ட மகளிர் அணி, மாணவர் அணி, இளைஞரணி, தகவல் தொழில்நுட்பஅணிநிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள்,வாக்கு சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



கழக 75 வது பவளவிழா ஆண்டை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க மற்றும் சென்னை கற்பக விநாயக மருத்துவக் கல்லூரி, கற்பக விநாயக பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச மெகா சிறப்பு மருத்துவ முகாம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வைஷ்ணவி மஹாலில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா தலைமையில் தென்காசி மக்களவை உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. முகாமில் நோயாளி ஒருவருக்கு கண் சிகிச்சை அளிக்கப்பட்டது.உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தங்கவேலு, சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ., மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பகவிநாயகம், மாவட்ட ஊராட்சி மன்ற குழு தலைவர் தமிழ்ச்செல்வி, ஒன்றிய செயலாளர் லாலா சங்கரபாண்டியன், ம.தி.மு.க. துணை பொதுச்செயலாளர் ராஜேந்திரன் உள்பட பலர் உள்ளனர்.

# நெல்லை மாநகராட்சி மாமன்றக் கூட்டம்!

## மேயர் கோ.ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது!

நெல்லை.அக்.29.

நெல்லை மாநகராட்சி மாமன்ற கூட்டம் மைய அலுவலகம் இராஜாஜி மண்டபத்தில் மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் என்.ஓ. சுகபுத்ரா முன்னிலையில் நடைபெற்றது. சிறப்பு தீர்மானங்களை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் வாசித்தார்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானங்கள் விவரம் வருமாறு.

பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் கோரிக்கையை ஏற்று நெல்லை மாநகராட்சி வர்த்தக மைய வளாகத்தின் முன்பு வ.உ.சி. மணிமண்டபம் செல்லும் பாதையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவ வெண்கல சிலை அமைத்திட இம் மாமன்றம் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

44 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மேலப்பாளையம் ரயில் நிலையம் வழியாக செல்லும் அனைத்து ரயில்களும் மேலப்பாளையத்தில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கி செல்ல வேண்டும் என ரயில்வே துறைக்கு கடிதம் அனுப்பவும், என்றும்.வார்டு எண் 39 சிவந்திபட்டி சாலையில் ரயில்வே மேம்பால பணி நடைபெற்று வருகின்றது மேற்கண்ட சாலையில் சுரங்கப்பாதை அமைப்பதை நிறுத்தம் செய்து Y வடிவ பாலம் அமைக்க அரசுக்கு கடிதம் அனுப்புவது என்றும்.

நெல்லை நகராட்சி காலத்தில் நகராட்சிக்கு எதிர்புறம் வடக்கு பகுதியில் பல ஏக்கர் நிலம் கையகப்படுத்தி நகராட்சிக்கு நிரந்தர சொத்து ஏற்படுத்தி உள்ளனர். தற்போது அந்த இடத்தில் மாநகராட்சியின் வருவாயினை பெருக்குவதற்காக ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் வர்த்தக மையம் கட்டப்பட்டுள்ளது.இதனால் மாநகராட்சி மக்கள் மத்தியில் பொழுதுபோக்கிற்காக இடம் ஏதும் இல்லாமல் மிகவும் வேதனை படுகின்றனர்.பொதுமக்கள் நலன் கருதி இம்மாநகராட்சி வர்த்தக மையத்தின் வடக்கு புறத்தில் 10 ஏக்கர் நிலம் தனியார் இடமிருந்து கையகப்படுத்த முடிவு செய்வது என்றும்.

நெல்லை மாநகராட்சி தென்புறத்தில் மாநகராட்சி அலுவலகத்தினை விரிவாக்கப் படுத்துவதற்காக மாநகராட்சி அலுவலகத்தின் தென்புறம் 5 ஏக்கர் நிலத்தினை தனியாரிடமிருந்து கையகப்படுத்தும் வகைக்கு தீர்மான நிறைவேற்றி அரசுக்கு அனுமதி வேண்டி நிறைவேற்றப்படுகிறது.

இவ்வாறு சிறப்பு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

மேலும் கூட்டத்தில் சாதாரண மற்றும் அவசர கூட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிகழ்வில் மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி உதவி ஆணையாளர்கள்,மாநகராட்சி அலுவலர்கள்,பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பாக மகளிர் அணியினருக்கு தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் கீர்த்திகா தங்கபாண்டியன் தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் தங்கபாண்டியன், மதன்குமார் மற்றும் மகளிர் அணியினர், கழகத்தினர் உள்ளனர்.

### நாளை (30ம் தேதி) பசும்பொன் வருகை தரும்

# முதல்வருக்கு - சிவகங்கை மாவட்டக் கழகம் சார்பில் திருப்புவனத்தில் உற்சாக வரவேற்பு!

## அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, அக். 29-

சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும்,, கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ள தாவது.

திராவிட மாடல் ஆட்சி நாயகர் தமிழக முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்கள் நாளை (30ஆம் தேதி) பசும்பொன் தேவர் குருபூஜை விழாவில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள். இதற்காக நாளை (30ஆம் தேதி புதன்கிழமை) மதுரையிலி ருந்து கார் மூலம் பசும்பொன் செல்லும் முதல்வருக்கு சிவகங்கை மாவட்ட திமு.க. சார்பில் மாவட்ட எல்கையான திருப்புவனம் மின்வாரியம் அலுவலகத்தின் எதிரில் காலை 8 மணி அளவில் எனது (கே ஆர். பெரிய கருப்பன்) தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது .

அதனை தொடர்ந்து 8.30 மணி அளவில் மானா மதுரை புதிய பேருந்து நிலையம் எதிரில் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற , நாடாளு மன்ற உறுப்பினர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக, செயலாளர்கள் சார்புஅணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஆகியோர்



காலை சரியாக 7:45 மணியளவில் திருப்புவனத் திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினரும் முன்னாள் நெல்லை சட்டமன்ற உறுப்பினரும்,முன்னாள் நெல்லை மேயருமான ஏ.எல். சுப்பிரமணியன் அவர்களின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு பாளையங் கோட்டையில் உள்ள அன்னாரது இல்லத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மறைந்த ஏ. எல்.சுப்பிரமணியன் அவர்களின் திருவுருவ படத்திற்கு பாளை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்வகாப் தலைமையில் மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன் முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்,முன்னாள் எம்.எல்.ஏ ஏ.எல். எஸ்.லெட்சுமணன்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலாசத்யானந்த், தளவாய், சிவ ஜெயராம், கண்ணன், பிரேம், ரேவதி அசோக், உமாபதி சிவன், கமாலுதீன், வல்லநாடு முத்து, அன்பழகன், அசோக், முரசொலி முருகன், ராமசாமி, யோகி, சிவா, பாலன், இனியன், முத்துப்பாண்டி, பாஸ்கர், திராவிட மணி, சுபா, அனிதா, ஜெனி, அங்கப்பன், வேலு மாரிமுத்து, சுப்பிரமணியன், காசி மணி, சங்கர், நமச்சிவாயம், அப்துல் கையூம், ஏ.எல்.எஸ். சண்முகம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

